# வெடுக்குநாறிமலையில் கைதான 8 பேரையும் விடுவித்தது நீதிமன்றம்





## பொலிஸாரின் வழக்கும் தள்ளுபடி

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் நீதிமன்றத்தால் இன்று விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிரான வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி பூஜை வழிபாட்டில் தமிழர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு சப்பாத்துக்கால்களுடன் உட்புகுந்த பொலிஸார், வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டிருந்ததுடன் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 2▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை 19.03.2024 கதிர் 205




## வெடுக்குநாறி அராஜகங்களை கண்டித்து யாழ் பல்கலை மாணவர்கள் போராட்டம்




வவுனியா – வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் அரங்கேறிய அராஜகங்களை கண்டித்து யாழ்ப் 2▶

## பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சு பணிப்புரை


தற்போது நிலவும் வெப்பமான காலநிலையை கருத்தில் கொண்டு பாடசாலை விளையாட்டு போட்டிகளை ஏப்ரல் 24 ஆம் திகதியின் பின்னர் நடத்துமாறு கல்வி அமைச்சு நேற்று (18) சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த சுற்றைக்கையின்படி, தற்போது பாடசாலைகளில் முதல் பருவத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த பாடசாலை வருடாந்த விளையாட்டு போட்டிகள் உட்பட பல்வேறு வெளிப்புற செயற்பாடுகள் ஆகிய அனைத்தையும் ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சு பணித்துள்ளது. அதற்கமைய, இப்போட்டிகளை ஏப்ரல் 24 ஆம் திகதிக்கு பின்னர் நடத்தக்கூடியவாறு திட்டமிடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி வசந்தா பெரேரா விடுத்துள்ள மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கை நாட்டின் அனைத்து அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன், பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பில் ஆலோசனைகள் தேவைப்பட்டால், அனர்த்த முகாமைத்துவ 2▶

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் வரும் 21 இல்!



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்திற்கு மற்றுமொரு திகதியை வழங்குவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 21ஆம் திகதியும் அதே தினம் மாலை 4.30 க்கும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04)

## வெடுக்குநாறிமலை விவகாரம் சபையில் வெடித்தது போராட்டம்

### தமிழ் எம்.பிக்களுடன் சஜித்தும் களமிறங்கினார்



வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட 8 தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், மத வழிபாட்டை உறுதி செய்யுமாறு கோரியும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சபைக்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்குக் 2▶

# அதிக வெப்பநிலையில் நீர் அருந்தா விட்டால் உடல் செல்கள் செயலிழந்துவிடும் அபாயம்!

## மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவிப்பு

அதிக வெப்பநிலை காரணமாக மனித உடலுக்குத் தேவையான அளவில் தண்ணீர் சேர்க்கப்படா விட்டால், உடற் செல்கள் செயலிழந்து போகும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவத்துறை சர்வதேச தொடர்பாளரான மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

பொதுவாக வயது வந்த ஒருவருக்கு உடல் செயல்பாட்டிற்கு தினமும் குறைந்தது இரண்டு லீட்டர் தண்ணீர் தேவைப் படுவதாகவும், ஆனால் பெரும்பாலான மக்கள் அந்த நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யாமல் நீரிழப்புக்கு ஆளாகி, செல்கள் செயலிழந்து, உடலின் அயனி பரிமாற்றம் கூட இழக்கப்படுவதாக மருத்துவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக தற்போது முஸ்லிம் மக்கள் ரமழான் பண்டிகைக்காக நோன்பு நோற்பதாகவும், அவர்களும் இந்தத் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி அந்த 18 மணி நேரத்தில் மூன்று லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும் எனவும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களுடன் ஒப்பிடும் போது, ஏப்ரல் மாதத்தில் வெப்பநிலை 28 பாகை செல்சியஸ்/க்குக் குறைவாக இருந்ததாகவும், ஆனால் இந்த ஆண்டு அது ஏற்கனவே 33, 34 பாகை செல்சியஸைத் தாண்டியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ரெம-64)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பாங்கொக் - கொழும்பு விமான சேவை ஏப்ரல் 1 முதல் ஆரம்பம்

'கொவிட் ' காலத்தின் போது நிறுத்தப்பட்டிருந்த தாய் ஏயார்வேஸ் விமான சேவையை நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிப்பதற்கு அந்த விமான சேவை நிறுவனம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதலாவது விமானம் ஏப்ரல் 1 ஆம் திகதி தாய்லாந்தின் பெங்கொக் விமான நிலையத்திலிருந்து கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ளது.

மேற்படி விமான சேவை ஏற்பாட்டின் கீழ், தினமும் தாய் விமானமொன்று பெங்கொக் நகரிலிருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்து அதேதினம் அவ்விமானம் கட்டுநாயக்கவிலிருந்து பெங்கொக் நோக்கி பயணிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து அரசாங்கத்துடனும் தாய்லாந்து விமான சேவை நிறுவனத்துடனும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கலந்துரையாடல்களின் விளைவாகவே இந்த விமான சேவையை மீள ஆரம்பிக்க முடிந்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-63)

# முதலில் ஜனாதிபதித் தேர்தலே! ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்

முதலில் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் முதலில் நடைபெறலாம் என்ற கருத்துகள் பரவலாக உலா வந்த நிலையில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மின்சார வாகன இறக்குமதியினால் வருமானம் இரட்டிப்பு மடங்காம்

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதித்ததன் காரணமாக, மோட்டார் வாகனங்கள் மீதான கலால் வரி வருமானம் கடந்த வருடம் (2023) முதல் ஒன்பது மாதங்களில் 57.1 சதவீதம் அதிகரித்து 21.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என அமைச்சு வெளியிட்டுள்ள பொது நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்கள் மீதான கலால் வரி வருமானமாக 2022 முதல் ஒன்பது மாதங்களில் 13.7 பில்லியன் ரூபாய்கள் ஈட்டப்பட்டுள்ளன. அதன்படி, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மோட்டார் வாகனங்கள் மீதான கலால் வரி வருமானம் 21.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. வாகனத்துறை தொழிலாளர்களுக்கு ஓர் ஊக்கமாக மின் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெம-64)

## பாடசாலைகளில்...

நிலையத்தின் 117 என்ற அவசர எண்ணிலோ அல்லது அவசரகால செயல்பாட்டு நிலையத்தின் 0112136136 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெறலாம் எனவும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலை மற்றும் கடும் வெய்யிலை கருத்திற் கொண்டு பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டாம் என மாணவர்களின் பெற்றோர் ஏற்கனவே கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்ததுடன், பல பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் பயிற்சியின் போது சில பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரெம-62)

## வெடுக்குநாறிமலையில்.....

8 பேரைக் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைதான 8 பேரும் மறுநாள் 9 ஆம் திகதி வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 12 ஆம் திகதி வழக்கு மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, 19 ஆம் திகதி (இன்று) வரை பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய மேற்படி 8 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

விளக்கமறியலில் அவர்கள் வைக்கப்பட்டிருந்த நாட்களில் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு - கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸார் அவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறிய காரணத்தால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு 8 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

கைதானவர்கள் சார்பாக என்.சிறிகாந்தா, அன்ரன் புனிதநாயகம், க.சுகாஸ், தி.திருஅருள், அ.திலீப்குமார், நிவிதா, கிசான், தர்சா, நிதர்சன், கொன்சியஸ், சாருகேசி உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை, வெடுக்குநாறிமலையில் கைதான 8 பேரின் விடுதலையை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்கள் இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பங்கேற்று தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

கைதானவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை தொடர்பில் நீதி அமைச்சர் வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் நிறைவுக்கு வந்திருந்தது.

கைதானவர்களின் விடுதலையையடுத்து சபையில் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி., "எமது போராட்டத்தையடுத்து நீதிமன்றத்தால் 8 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றி." - என்றார். (அ)

## வெடுக்குநாறி ...

பாண பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இன்று மதியம் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் கலந்துகொண்டிருந்தனர்.

மாணவர்களின் போராட்டம் காரணமாக இராமநாதன் வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், வெடுக்குநாறி எங்கள் சொத்து, மயிலத்தமடு எங்கள் சொத்து, திட்டமிட்ட கைதுகளை நிறுத்து, சிங்கள பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்து, தையிட்டி எங்கள் சொத்து, நீராவியடி எங்கள் சொத்து, குருந்தூர்மலை எங்கள் சொத்து, மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா? உள்ளிட்ட பல கோசங்களை எழுப்பியிருந்தனர். (O1)

## வெடுக்குநாறிமலை விவகாரம்....

கூட்டணி ஆகியவற்றின் எம்.பிக்கள் சபை நடுவே வந்து, பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபை நடுவே வந்து இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் எம்.பிக்கள், "நிறுத்து நிறுத்து இனவாதத்தை நிறுத்து", "நிறுத்து நிறுத்து மதவாதத்தை நிறுத்து", "பொலிஸ் அராஜகம் ஒழிக", "தொல்பொருள் திணைக்களத்தின் அராஜகம் ஒழிக", "பொய் வழக்கை வாபஸ் பெறு", "விடுதலை செய் விடுதலை செய் கைதான அப்பாவிகள் 8 பேரையும் விடுதலை செய்", "தொல்பொருள் அமைச்சரே பதவி விலகு", "வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து", "குருந்தூர்மலை எங்கள் சொத்து", "மயிலத்தமடு எங்கள் சொத்து" போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, "வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்" - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வாக்குறுதியளித்தார்.

"கைதான 8 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்" - என்று நீதி அமைச்சரிடம் தெரிவித்த தமிழ் எம்.பிக்கள், போராட்டத்தையும் நிறுத்துக்கொண்டனர். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியில் பல்கலை அனுமதி பெற்ற மாணவர் கௌரவிப்பு



(அஸ்ஹர்இப்றாஹிம்)

புனித பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற சுமார் 25 மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினரால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, பணமுடிச்சு வழங்கி கல்லூரிப் புனிதர் தினத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் தொடக்கத்தில் பழைய மாணவர் சங்க கொடியை கல்லூரி அதிபரும், கல்லூரியின் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கத் தலைவருமாகிய அருட்திரு ஏ.பி.திருமகன் அடிகளார் ஏற்றி வைத்தார்.

முதல்நிகழ்வாக புதிதாக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையே சிநேக பூர்வ ரி-10 கிறிக்கெட் போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர், செயலாளர், மற்றும் கல்லூரியில் கற்று புலம்பெயர் தேசங்களில் இருந்து கல்லூரிக்கு வருகை தந்த பழைய மாணவர்கள் உட்பட பல பழைய மாணவர்கள், கல்லூரி நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வினை ஒவ்வோர் ஆண்டும் கல்லூரித் தினத்தில் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் வரும் திங்களன்று மஹா கும்பாபிஷேகம்




தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பங்குனி உத்தர நன்னாளில் இடம்பெறவுள்ளது.

நாளை 20 ஆம் திகதி காலை கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் ஆரம்பமாகவுள்ளதுடன் 21ஆம் திகதி நண்பகல் முதல் 24 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்த வகை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பங்குனித்திங்கள் 12 ஆம் நாள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பௌர்ணமி திதியும் உத்தர நட்சத்திரமும் சித்த யோகமும் பாலவ கரணமும் இடப லக்கினமும் பொருத்திய காலை 9.25 மணி தொடக்கம் காலை 10.33 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் சபரிவாசமேத துர்க்காதேவிக்கு பெரும் சாந்தி விழா நடைபெறவுள்ளது.

அன்று காலை 6 மணி தொடக்கம்7.10 வரை இராஜகோபுர கும்பாபிஷேகமும் காலை 9.25 மணி தொடக்கம் 10.33 மணி வரை மூலாலய கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

துர்க்கா தேவியின் பக்தர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தவர்களுடன் தமிழ்க் கலாசார முறைப்படி வருகை தந்து வழிபாடாற்றுமாறு ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுதல் விடுத்துள்ளார்.

# அவுஸ்திரேலிய அதிகாரிகள் குழு யாழ் பல்கலைக்கு விஜயம்!



அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, அவுஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டது.

இலங்கையில் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, அவுஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை ஆகியன இணைந்து மேற்கொண்டுள்ள கடல்சார் வள மற்றும்கடலோரப்பாதுகாப்புத்தொடர்பான விழிப்புணர்வுத் திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கும், அவுஸ்திரேலிய அரசின் உதவிகள் வழங்கப்படக்கூடிய இடங்களை அடையாளங்காணும் வகையிலும், கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் மற்றும பொருளாதாரத்துக்கான முதல்செயலாளர் கலாநிதி போல் செக்கோலா தலைமையிலான குழுவினரே கடந்த வாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது அவுஸ்திரேலிய அதிகாரிகள் குழுவில், தென் ஆசிய மற்றும் இந்து சமுத்திரக் கடற் பிராந்தியப் பாதுகாப்புசார் விற்பன்னரும், அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழக தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளருமான கலாநிதி டேவிற் பிரேஸ்டர், ரோயல் அவுஸ்திரேலிய கடற்படையின் ஓய்வு பெற்ற அதிகாரியும், புதுதில்லியில் கடமையாற்றும் அவுஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசகருமான கப்டன் சைமன் பேட்மன், கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அமெண்டா ஜோண்சன் மற்றும் அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அத்தியட்சகர் வனேசா ரஃப் ஆகியார் அடங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில், கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் மற்றும் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி (திருமதி) கே. கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள் மற்றும் அவுஸ்திரேலிய அரசின் நலனோம்புத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், சட்ட விரோத புலம்பெயர்வு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சமூக மட்டச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.



# தமிழகத் தேர்தலில் பிஜேபியுடன் கூட்டணி பாட்டாளி மக்கள் கட்சி ஒப்பந்தம் செய்தது!

இந்தியாவின் தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில், பாட்டாளி மக்கள் கட்சி இணைந்து போட்டியிடுவதற்கான ஒப்பந்தம் இன்று காலை கையெழுத்தாகியுள்ளது.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் ஒரே கட்டமாக ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பாமக தனது கூட்டணியை இறுதி செய்துள்ளது.

கடந்த ஒரு மாதமாக அதிமுக மற்றும் பாஜகவுடன் பாமக கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், நேற்றிரவு பாஜகவுடன் கூட்டணி அமைப்பதாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து, இன்று காலை பாமக நிறுவனர் ராமதாசும், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையும் கூட்டணிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

பாஜக கூட்டணியில் போட்டியிடும் பாமகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எந்தெந்தத் தொகுதிகளில் போட்டி என்பது விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அன்புமணி ராமதாஸ் தகவல் வழங்கியபோது, மத்தியில் கடந்த 10 ஆண்டுகளாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அங்கமாக பாமக இருந்து வருகின்றது. வருகின்ற மக்களவைத் தேர்தலில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்ந்து போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் நலன் கருதி, மோடியின் நல்லாட்சி தொடர, தமிழகத்தில் மாற்றம் வர இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்.

60 ஆண்டு காலமாக தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் மீது வெறுப்பான சூழல் உள்ளது. மக்களுக்கு மாற்றம் வர வேண்டும் என்ற எண்ணம் ஆழமாக உள்ளது. அதனைப் பூர்த்தி செய்யத்தான்



இந்த முடிவை எடுத்துள்ளோம். எங்கள் கூட்டணி தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவிலும் மிகப்பெரிய வெற்றியைப் பெறும். பிரதமர் மோடி மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்படுவார், என்றார். (04)

# காஸாவில் அல்–ஷிபா மருத்துவமனை மீது இஸ்ரேல் படையினர் மீண்டும் தாக்குதல்!

காஸாவின் மிகப் பெரிய மருத்துவமனையான அல்-ஷிபா மருத்துவமனையைக் குறிவைத்து இஸ்ரேல் படையினர் மீண்டும் நேற்று திங்கட்கிழமை தீவிர தாக்குதல் நடத்தியுள்ளனர்.



போர்நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இஸ்ரேலின் உளவு அமைப்பான மொஸாடின் தலைவர் டேவிட் பார்னியா கட்டாருக்குச் சென்றுள்ள நிலையில், ஹமாஸ் அமைப்பினரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்படுவதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.

காஸா சிட்டியிலுள்ள அல்-ஷிபா மருத்துவமனையைக் குறிவைத்து இஸ்ரேல் படையினர் நேற்று அதிகாலை தாக்குதல் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர். ஏராளமான நோயாளிகள், மருத்துவப் பணியாளர்கள், பொதுமக்கள் இருக்கும் அந்த மருத்துவமனையைச் சுற்றியுள்ள பகுதிகளில் விமானங்கள் மூலம் தீவிரமாக குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில், மருத்துவமனையைச் சுற்றிவளைத்துள்ள இஸ்ரேல்எறிகளைத்தாங்கிகளும், கவச வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டன. மருத்துவமனையைச் சுற்றிலும் இஸ்ரேல் ராணுவத்துக்கும், ஆயுதக் குழுவினருக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அல்-ஷிபா மருத்துவ மனைப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சால் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமானவர்கள் உயிரிழந்ததாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். தாக்குதலில் காயமடைந்த ஏராளமானவர்களுக்கு உதவி செய்யக்கூட முடியாத அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ராணுவ நடவடிக்கை குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கப்ரியேசஸ் கூறுகையில், 'காஸா சிட்டியில் தற்போது நடைபெற்றுவரும சண்டை அச்சமூட்டுவதாக உள்ளது. அந்தச் சண்டையால் சுகாதாரப் பணியாளர்கள், நோயாளிகள், பொதுமக்களுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது' என்றார்.

இதற்கிடையே, அல்-ஷிபா மருத்துவமனையை முக்கிய ஹமாஸ் உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக தங்களுக்குக் கிடைத்த உளவுத் தகவலின் அடிப்படையிலேயே இந்த தாக்குதல் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.

மேலும், அந்தப் பகுதியிலிருந்து வெளியேறுமாறு பொதுமக்களுக்கு ராணுவம் உத்தரவிட்டுள்ளது.

காஸாவில் கடந்த 164 நாள்களாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31,726 ஆக அதிகரித்துள்ளதாகவும், இஸ்ரேலின் குண்டுவீச்சில் இதுவரை 73,792 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# ஆப்கானிஸ்தானில் இன்று நிலநடுக்கம்



*ஆப்கானிஸ்தானில் இன்று உள்ளூார் நேரப்படி காலை 6 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவில் 5.3 ஆக பதிவானதாக அந்த நாட்டின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் நகரின் தெற்கே - தென்மேற்கு திசையில் 632 கிலோ மீற்றர் தொலைவில் பாகிஸ்தானை ஒட்டிய பலோசிஸ்தானின் நுஷ்கி பகுதியிலிருந்து 65 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கத்தின் மையப்பகுதி இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கத்தின் மையப்பகுதி இருந்ததால் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவலாக நில அதிர்வு உணரப்பட்டதாகவும், எனினும், பெரிதாக சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)*

# ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது பங்களாதேஷ்! 3ஆவது போட்டியில் இலங்கை அணிக்குத் தோல்வி

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரின் இறுதி ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட்களால் வெற்றிபெற்று தொடரையும் கைப்பற்றியுள்ளது.

பங்களாதேஷ் சட்டோகிராமில் உள்ள அஹமட் சௌத்ரி சர்வதேச மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களையே பெற்றது.

ஜனித் லியனகே ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களையும், சரித் அசலங்க 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

236 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 40.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

தன்சிட் ஹசன் 84 ஓட்டங்களையும், முஸ்பிகுர் ரஹிம், ரிஷாட் ஹொசைன் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 37, 48 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் லஹிரு குமார 4 விக்கெட் டுகளையும் வனிந்து ஹஸரங்க 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 -1 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது. (04)



# ஒன்பது நாட்களாக மூடிக்கிடக்கிறது திருக்கோவில் ஆதார வைத்தியசாலை!

## நாளை ஆளுநர் தலைமையில் திருமலையில் கூட்டம்




(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த ஒன்பது நாட்களாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் மூடிக்கிடக்கின்றது.

இதனால் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் தமிழ்மக்கள் வைத்திய சேவையின்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள் .

அவசர சிகிச்சைகளுக்காக அப்பிரதேச மக்கள் கால - நேர - பணம் செலவுசெய்து அக்கரைப்பற்று வைத்திய சாலைக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் மர்சூத்திடம் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்டபோது, வைத்தியசாலைச் செயற்பாடுகள் இன்னும் வழமைக்கு திரும்பவில்லை. இன்று (19 செவ்வாய்க்கிழமை) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாணப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரின் கலந்துரையாடல் கூட்டம் இங்கு நடைபெறவிருக்கிறது. அதன்பின்னர் முடிவுகள் தெரியவரும், என்றார்.

இதேவேளை, நேற்று திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரும் பிரதேச செயலாளரும்வைத்தியசாலை மூடப்பட்டுக் கிடப்பது தொடர்பாகவும் அது திறக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் தெரிவித்தார்கள்.

அதற்கு அவர், புதன்கிழமை (20) திருகோணமலையில் கூட்டம் இடம்பெறும். அதில் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தொடக்கம் சம்பந்தப்பட்ட சகலரையும் அழைத்துள்ளார். அதன்படி திருமலையில் நடைபெறும் இறுதிக் கட்டக் கூட்டத்திற்குப் பிற்பாடு வைத்தியசாலையைத் திறப்பது தொடர்பாக அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, ஒரு வாரத்துக்கு முன்பு மரதன் ஓடிய ஒரு மாணவனின் இறப்பைத் தொடர்ந்து அங்கு வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதும் அதன் போது வைத்தியசாலைக் கண்ணாடிகள், பெயர்ப் பலகைகள்ஆகியன உடைக்கப்பட்டிருந்தன.

இதனை அடுத்து தங்களுக்கு பாதுகாப்பில்லை, என்று கூறி அங்கிருந்து வைத்தியர்கள் வெளியேறினார்கள்.

அதனால்அன்றிலிருந்து இன்று (19) செவ்வாய்க்கிழமை வரை ஒன்பது நாட்களாக வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. அங்கே எவ்விதமான வைத்திய சேவைகளும் இடம் பெறவில்லை. இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாம்புக்கடி, தூக்கிட்டு தற்கொலை முயற்சி போன்ற பல அவசர தேவைகள் ஏற்பட்டும், சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக அக்கரைப்பற்று ஆதரவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவ்வேளையில் வைத்தியசாலை மீளத் திறக்கப்பட வேண்டும். பொதுமக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல பொது அமைப்புகள் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் இது குறித்துத் தெரிவிக்கையில் தான் மறுநாளே அங்கு பயணித்து வைத்திய அத்தியட்சகர், பொலிசார் மற்றும் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோரோடு தொடர்பு கொண்டு நிலைமையின் தீவிரத்தைத் தணிக்க முயற்சித்ததாகவும் வைத்திய சாலையை மீளத்திறக்க முயற்சிகளை மேற்கொண்டதாகவும் கூறினார்.

பின்பு பொலிசாரின் பாதுகாப்பினைக் கோரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் பேசி வைத்தியசாலை பாதுகாப்பிற்கு பொலிசாரை அமர்த்த நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை அரச வைத்தியர்கள் சங்கத்தினர், தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவனின் மரணம் மற்றும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக திருக்கோவில் பொலிசார் வலயக்கல்வி அலுவலகம் மற்றும் வைத்தியசாலை வட்டாரங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

எது எப்படி இருப்பினும் நாளைய தினம் (20) புதன்கிழமை ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் திருமலையில் இடம்பெறும் கூட்டத்தின்போது வைத்தியசாலை திறக்கப்படுவதற்கான சாதகமான அறிகுறி தென்படுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முதலில் வைத்திய சாலையைத் திறந்து பொது மக்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவையை வழங்குங்கள். பிறகு உங்கள் விசாரணகளை நடாத்துங்கள். குற்றம் நடந்திருந்தார், அதனோடு சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்துங்கள்.

எதற்கும் முதலில் வைத்திய சாலையை திறந்து இயக்கச் செய்யுங்கள், என்று பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## பாடப்புத்தகங்கள் சீருடைகள் கிடைக்காவிடின் அறிவிக்குக!

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளுக்கு இதுவரை பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைப் பொருட்கள் கிடைக்காவிடின் அது குறித்து அறிவிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி கீழ்காணும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அது குறித்து அறிவிக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புத்தகங்கள்:
தொலைபேசி: 0112784815ஃ0112785306
தொலைநகல்: 0112784815
மின்னஞ்சல்: epddistribution2024@gmail.com
சீருடைகள்:
தொலைபேசி: 0112785573
தொலைநகல்: 0112785573
மின்னஞ்சல்: schoolupplymoe@gmail.com

## பூண்டுலோயாவில் ஒருவர் பரிதாபப் பலி

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீன் தோட்ட மேல் பிரிவு தோட்டத்தில் அதிர்ச்சிக்கு உள்ளாகி தரையில் வீழ்ந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தான் வசிக்கும இலக்கம் நான்கு தொடர் குடியிருப்பு வீட்டுப் பகுதியில் தனது கண்முன்னே மின் கம்பத்தில் திடீரென மின் இணைப்பு வயர்கள் தீப்பிடித்து எரிவதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த நபர் திடீரென தரையில் வீழ்ந்து உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுப்பையா சண்முகம் (வயது 58) என்பவர் உயிரிழந் துள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் சீன் மேல் பிரிவு தோட்டத்தில் அடிக்கடி மின் இணைப்பு வயர்கள் தீப்பிடிக்கின்றன என்று தெரிவிக்கும் தோட்ட மக்கள், இந்தத் தோட்டத்தில் தொடர் குடியிருப்புகள் அருகில் காணப்படும் மின் கம்பங்களில் மின் கசிவுகள் மற்றும் இணைப்பு வயர்கள் தொடர்பில் இலங்கை மின்சார சபை பிராந்திய தொழிநுட்ப அதிகாரிகள் பார்வையிட்டு சீர்த்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)



மாலைக்கதிர்
Maalaikkathir



# தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் விலங்குகள் உயிரிழப்பிற்கு கால்நடை மருத்துவர்களே பொறுப்பு!

## போராட்டம் முன்னெடுக்கப்படும் என்கிறார் தொழிற் சங்க தலைவர்

'தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையிலிருந்த விலைமதிப்பற்ற விலங்குகள் பல உயிரிழந்துள்ளன. இவை கொலைக்கு சமமானவை. இதற்கு இங்குள்ள மருத்துவர்களே பொறுப்பேற்க வேண்டும். இவர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டு முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

வனஜீவராசிகள் அமைச்சு இது தொடர்பில் கவனம் செலுத்தாவிடின் அனைத்து மிருகக்காட்சிசாலை ஊழியர்களும் இணைந்து மாபெரும் கண்டனப் போராட்டத்தை முன்னெடுப்போம்' என மிருகக்காட்சிச்சாலை திணைக்கள தொழிற் சங்கத்தின் தலைவர் கிருஷாந்த கிறிஸ்டோபர் தெரிவித்துள்ளார்.


மிருகக்காட்சிச்சாலையில் அண்மையில் நடந்த ஒட்டகச்சிவிங்கியின் மரணம் மற்றும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடந்த வரிக்குதிரையின் மரணம் ஆகியனவற்றிற்கு கால்நடை மருத்துவர்களின் அலட்சியமே காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "சில மாதங்களுக்கு முன்னர், மிருகக்காட்சிச்சாலையிலிருந்த ஒரு ஒட்டகச்சிவிங்கி கொல்லப்பட்டது, குறைந்தபட்சம் அது பற்றிய அறிக்கையாவது இந்த தொழிற்சங்கங்களுக்கு கொடுக்கப்படவில்லை. இந்த மிருகக்காட்சிச்சாலையில் 12 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கால்நடை மருத்துவர் மட்டுமே இருந்தார். தற்போது 12 மருத்துவர்கள் உள்ளனர். அப்படியிருந்தும் இவர்களால் விலங்குகளை பாதுகாக்க முடியவில்லை. இதனால் தான் இதற்கு வெளிநாட்டு மருத்துவர்களின் ஆதரவைப் பெறச் சொல்கிறோம். 2019 முதல், மிருகக்காட்சிசாலையில் விலங்குகள் இறந்தமை குறித்து முறையான விசாரணை எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை", எனவும் குறிப்பிட்டார். (ரெம-59)




# இலங்கையில் நாளொன்றிற்கு 1000 கருக்கலைப்புகள்! சமூகப் பாதுகாப்பு இல்லாத நிலையே காரணமாம்

## பிரிட்டனின் 'லன்செட் மெடிக்கல் ஜேர்னல்' சஞ்சிகை தெரிவிப்பு




இலங்கையில்சமூகப்பாதுகாப்பு வீழ்ச்சியடைந்துள்ளதால் நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும்மேற்பட்ட கருக்கலைப்புகள் இடம்பெறுவதாக சமீபத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக பிரிட்டனின் 'லன்செட் மெடிக்கல் ஜேர்னல்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இவ்வாறு கருக்கலைப்புக்கு உள்ளானவர்களில் மாணவிகள், பல்கலைக்கழக மாணவிகள், திருமணமாகாத யுவதிகள் மற்றும் திருமணமான பெண்களும் அடங்குவதாக மேற்படி கணக்கெடுப்பு அறிக்கை குறிப்பிட்டுள்ளதாகவும் விசேட மருத்துவ நிபுணர் ஜி. சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமூகப் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி கருக்கலைப்பிற்கு உள்ளாகும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையே இவ்வாறு அதிகரித்துள்ளதாகவும், இவ்வாறான சூழல் நிலையில் எய்ட்ஸ் போன்ற நோய்களுக்கு உள்ளாகும் இளம் வயதினரும் அதிகரித்திருப்பதாகவும் மருத்துவ நிபுணர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் எடை குறைந்த கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள மேற்படி 'லன்செட்' சஞ்சிகை, மன உளைச்சலுக்கு ஆளாகும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதால், தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதாகவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ரெம-60)

# சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றனவாம் ! வெலிக்கடை சிறைச்சாலை ஹொரணைக்கு!



இலங்கையிலுள்ள அனைத்து சிறைகளிலும் உள்ள கைதிகளின் எண்ணிக்கை முப்பதாயிரத்து எண்ணூறு வரை அதிகரித்துள்ளது என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கையை விட இது சுமார் முந்நூறு வீத அதிகரிப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தற்போது சுமார் மூவாயிரம் கைதிகளை கொண்டுள்ள வெலிக்கடை சிறைச்சாலை ஹொரணைக்கு மாற்றப்படவுள்ள நிலையில், அங்கு நிர்மாணிக்கப்படவுள்ள புதிய சிறைச்சாலை கட்டிடத்தில் பத்தாயிரம் கைதிகள் தங்கவைக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்படவுள்ளது எனவும் திஸ ாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-61)

# புதிய சமுர்த்திப் பணிப்பாளர் அம்பாறையில் பொறுப்பேற்பு



(அஸ்ஹர் ஆதம்)

அம்பாறை மாவட்டத்தின் புதிய சமுர்த்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அட்டாளைச்சேனையின் முன்னாள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமட் ஸாபீர் இன்று செவ்வாய்க்கிழமை, மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.






## திருக்கோவிலில் பொதுமக்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கப்பட்டன



(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச பொதுமக்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்று (18) திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் சமுகமளித்திருந்தார்.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட காணி ஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்யும் நூறு பொதுமக்களுக்கான காணி ஆவணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண காணி உதவி ஆணையர் கேஎல்எம். முஸம்மில், உதவி பிரதேச செயலாளர் திருமதி நிருபா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. அனோஜா, கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர்கள், திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் திரு. பரமானந்தம், சமுக சூழல் பாதுகாப்பு உத்தியோத்தர் பி.சீலன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கல்முனை பொலிஸ் நிலையத்தில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர் தலைமையில் பொலிஸ் நிலையத்தின் திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலாநிதி சட்டத்தரணி அஜித் ரோஹண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ, கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக உட்பட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், இராணுவ, கடற்படை அதிகாரிகள் பொலிஸ் பரிசோதகர்கள், சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர் .

நிகழ்வின்போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சிவில் சமூக அமைப்பினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store






வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

GET IT ON Google Play
Download on the App Store

DOWNLOAD DRIVER APP:




YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

**JRIDE TAXI APP**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2024 இல் வெளியிடப்பெற்றது.